செ.வெ.எண்: 67/செப்டம்பர்/2019 நாள்:19.09.2019

# செய்திக்குறிப்பு

## Village Health Nurse

மருத்துவப்பணியாளர் தேர்வு வாரியத்தால் அறிவிக்கப்பட்ட 1234 **Village Health Nurse** (Female) பணிக்காலியிடங்களுக்கு தகுதிவாய்ந்த பெண் பதிவுதாரர்கள் அடங்கிய பட்டியல் தயாரிக்கப்பட உள்ளது. இப்பணியிடங்களுக்கு Auxiliary Nurse Midwife/Multipurpose Health Worker (Female) கல்வித்தகுதியினை மருத்துவத்துறையினரால் அங்கிகரிக்கப்பட்ட அரசு நிறுவனத்தில் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

மேற்கண்ட பணிக்காலியிடத்திற்கு வயது வரம்பு 1.7.2019 அன்று தாழ்த்தப்பட்ட வகுப்பினர் / பழங்குடியினர் வகுப்பினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / பிற்பட்ட வகுப்பினருக்கு உச்ச வயது வரம்பு இல்லை. பகிரங்க போட்டியாளருக்கு (OC) உச்ச வயது வரம்பு 40 ஆகும்.

மேற்காணும் கல்வித்தகுதியிற்கு உட்பட்ட பெண் பதிவுதாரர்கள் மட்டும் 23.09.2019 திங்கள்கிழமை அன்று மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், பாரதிதாசன் சாலை, வட்டாட்சியர் (மேற்கு) அலுவலகத்திற்கு பின்புறம், திருச்சிக்கு நேரில் அனைத்து சான்றிதழ்களுடன் வருகை புரியுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இதற்கான பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாதெனவும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அ.சிவராசு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**செய்தி வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**